
# விநாயகபுரம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேக வெளியீடு - 2015



இரா தெய்வராஜன்
திருக்கோவில்

## முத்துமாரி காவடி விருத்தம் (தெய்வராஜன்)

1. திருக்கோவில் வினாயகபுரம் தேடிவந்து
அருள் அள்ளி வழங்கி வரும் முத்துமாரி
இருள் நீங்கி ஒளிபெறவே ஓடிவந்தோம்
வரம் தந்து காத்தருள வேண்டும் அம்மா
விருத்தமாய் நான் பாடும் பாடல் தன்னை
விருப்போடு கேட்டு நீ மகிழ வேண்டும்
வருந்தியே காவடியும் ஆடிவந்தோம் - நீல
திருமாலின் சோதரியே அருள் செய்வாயே.

2. ஒரு தாயின் மக்களென வாழ்ந்த நாங்கள்
உயிர்ப்பயத்தால் ஓடோடி ஒளிந்த காலை
பெற்றவளாய் நீ வந்து காத்தயம்மா
போற்றியுனைப்பாட இன்று நலமாய் வைத்தாய்
ஆழியலை அரக்கனாக வந்த போதும்
அம்மாவே உன்பாதம் தொழுது நின்றோம்
ஆபத்து ஏதும் இன்றிக் காத்தாயம்மா - இந்த
ஆலையடி வீற்றிருக்கும் மாரித்தாயே

3. மக்கள் படும் துயரத்தைப் போக்க எண்ணி
மனமிரங்கி ஆலையடி தேடி வந்தாய்
அற்புதங்கள் பல செய்து காட்டிவந்தாய்
அடியாரின் மனங்குளிர அருளும் தந்தாய்
பொற்பதமே சரணமென நாடி வந்தோம்
கற்பகமே கவலைகளைத் தீர்ப்பாயம்மா
நற்பேறு பெற்றே நாம் மகிழ்ந்தே வாழ – எமக்கு
உற்ற வரம் தாருமம்மா முத்து மாரி.

4. மரண கண்டி ஆற்றோரம் நாடி வந்து
மரணத்தை வெல்வதற்கு வழிகள் காட்டும்
ஆதி சிவன் பார்வதியே அம்மா உந்தன்
ஆலயத்துக் குடமுழுக்கைக் கண்டோம் அம்மா
ஓங்கார ஒலியுடனே ஹோம குண்டம்
புகைபரப்பி ஊரெல்லாம் புனிதமாக்கும்
பகை உணர்வு பறந்தோட அருள்வாய் அம்மா
இந்த ஆலை நிழல் அமர்ந்திருக்கும் முத்துமாரி.

௫. மங்களமாய் மாங்கல்யம் காக்கும் மாரி
மங்கையரின் மனம் கவர்ந்த முத்துமாரி
பொங்குகடல் முகத்துவாரக் கரையில் வாழும்
திங்கள் முக மீனாட்சி சிவனின் பாதி
சிங்கத்தில் ஏறிவந்து காட்சி தாராய்
மாங்காட்டுக் காமாட்சி அரனின் தேவி
குங்குமத்தோடுண்ணை வந்து சேர வேண்டும் - இங்கு
தங்கு தடை ஏதும் உண்டோ வாரும் அம்மா.

௬. ஈசனுடன் கைலையிலே வாழும் ஷக்தி
ஈஸ்வரனார் படி அளக்கும் உண்மைகாண
எறும்பு ஒன்றை முந்தானை முடிப்பில் கட்டி
மறுநாளில் அதை அவிழ்த்துப் பார்த்த போது
குறுநல் ஒன்றை அது கவ்வி இருத்தல் கண்டு
குற்ற மொன்றிழைத்துவிட்டேன் என்று நொந்து
வேதனையில் விம்மி விம்மி அழுதே நின்றா – எங்கள்
வினாயகபுரம் வீற்றிருக்கும் முத்துமாரி

7. நதிக்கரையில் நந்தவனம் ஒன்றமைத்து
நறுமலரால் கங்கையினை அர்ச்சித்தாலே
செய்தபாவம் விலகி ஓடிப்போகும் என்று
பரமனார் உந்தனிடம் உரைத்தாரம்மா.
கலக்கமுடன் அவ்வாறு நீ செய்த போது
காவலுக்கு வந்த காத்தான் செயலைக் கேட்டே
கழுமரத்தில் அவனை ஏற்றச் சிவனும் சொல்ல – நீயும்
அதை மறுத்துச் சாகாவரம் அளித்தாயம்மா.

௮. எதிர்சாபம் இட்டதுந்தன் இறுமாப்பென்றும்
பூமியிலே நீ பிறந்து துயரப்பட்டு
கடியதவம் புரிந்து என்னை அடைவாயென்றும்
ஈஸ்வரனே ஈஸ்வரிக்குப் பாடம் சொன்னார்
எண்ணற்ற சோதனைகள் பல கடந்து
தவமியற்றத் தம்பமொன்றைத் தேர்ந்தெடுத்தாய்
அறுபதடித் தம்பத்தில் ஒரு காலூன்றி
பெருவிரலில் நின்று தவம் புரிந்தாய் அம்மா,

9. பதினாறு வருடங்கள் தவத்தில் போக
பரமனார் மனமிரங்கி கிழமாய் மாறி
பார்வதியின் தவ நிலைக்கு அருகில் வந்து
புலித்தோலை விரித்து மேல் அமர்ந்தார்தாயே
புலித்தோலை விரித்து மேல் அமர்ந்தார் தாயே
உமையவள் நீதவநிலையை விட்டிறங்கி
உம்முடைய கணவருக்குச் சேவை செய்ய
மனம் மகிழ்ந்து பரம சிவன் உன்னை நோக்கி – உமக்கு
என்ன வரம் வேண்டும் என்று கேட்டார் தாயே

10. பதினெட்டு முத்து வகை தாரும் என்று
பக்குவமாய்ப் பரமனிடம் கேட்டாய் அம்மா
அத்தனையும் அவர் கொடுக்கப் பெற்ற நீயும்
அதிலொன்றைச் சோதிக்க நினைத்தாய் தேவி.
பாரமான கனகமுத்தைச் சிவனார்க்கன்று
தூர நின்று அவர் மீது எறிந்து போது
நெருப்புத்தனலான அந்த முத்து
நின்றெரியத் தாங்காது துடித்தார் தாயே

11. ஏன் இந்தக் கனக முத்தை எனக்கெறிந்தாய்
எறிந்தவற்றை இறக்கிவிடு மாரித்தாயே
வயது சிறுபாலகர்க்கும் வயோதிபர்க்கும்
இந்த முத்தை எறியாதே என்றே சொன்னார்
வாழ்வினைக் கெடுத்தோர்க்கம் கொடியோருக்கும்
நஞ்சூட்டிக் கொன்றோர்க்கும் காமுகர்க்கும்
இந்தமுத்தை நீ எறிந்து மனதை மாற்றி – அவரை
நல்வராய் மாற்றிவிடு என்றால் அம்மா.

12. வரமாகப் பதினெட்டு முத்தைக் கேட்டு
வித்தைகளைச் செய்து வரும் மாரித்தாயை
முத்துமாரி என்றுமே நாமஞ்சூட்டி
வித்தகியாய் உமை வாழ்த்திச் சிவனும் சென்றார்.
அத்தனை துன்பங்களும் உன்னால் தீரும்
அரனாரின் அரவணைப்பு என்றும் சேரும்
துன்பங்கள் துயர் அனைத்தும் துடைப்பாய் தாயே
தென்னைவளர் சோலை உறை முத்துமாரி

13. ஏந்திழையே உம்மிடத்தை நாடிவந்தோம்
எதிர்காலம் சிறக்க எண்ணி ஏங்கி நின்றோம்
மடைப்பெட்டி தலைவைத்து நடந்தே வந்தோம்
விடை கொடுப்பாய் என்று எண்ணிப் படையில் வைத்தோம்
தாங்கவொண்ணா வேதனைகள் தொடர்வதாலே
தாயே உன் அருள் ஆசி வேண்டிநின்றோம்
ஓடியே வந்தெம்மைக் காப்பாய் தேவி – அம்மா
ஓங்கிவளர் ஆலையடி முத்துமாரி ..............

14. ஓங்காரி உன்புகழைப்பாடும் ஓசை
உடுக்கை ஒலி சேர்ந்தெம்மை உலுப்புதம்மா
தெய்வமாய் ஆடி அருள்வாக்கும் தந்து
தேவியரே என்றும் எமைக் காத்தும் வந்தீர்
ஊரிலுள்ளோர் உம் கோவில் திறந்து விட்டால்
உற்ற துயர் தனைத்துடைக்க வருவாரிங்கே
கேட்பவர்க்கு ஏற்றவரம் கொடுக்கும் தாயே
கேளாமலும் கொடுத்து மகிழ்விப்பாயே

15. காத்தெம்மை ஆட்கொண்டாய் பல்லாண்டாக
ஈர்த்தெமக்கு வாழ்வுதரும் மாரித்தாயே
பார்த்தும்மை தொழுது நிற்கும் பக்தர்க் கெல்லாம்
பாவங்கள் பொடிபடவே அருள்வாய் தாயே
நேர்த்திகளாய் அடையாளம் காணிக்கைகள்
பார்வதியே உந்தனுக்கு உவந்து தந்தோம்
ஈஸ்வரியே ஓங்காரி மாரித்தாயே – வந்து
கஸ்ரங்களைக் களைந்துவிடு முத்துமாரி

16. அம்மா உன் அழகுதிருக்கோலம் கண்டோம்
ஆண்டாண்டு தோறும் காணத்தருணம் தாரும்
உற்றதுணை உனையன்றி யாரும் உண்டோ
ஊரெல்லாம் நலியாது காத்தே வந்தாய்
பெருவெள்ளம் சுனாமி எல்லாம் தாண்ட வைத்தாய்
போர்க்காலம் முடியும் வரை கவசம் ஆனாய்
சங்கரியே தயாபரியே முத்துமாரி – ஒரு
சங்கடமும் அணுகாது காப்பாய் தேவி

17. பொய், களவு, கள், காமம் கொலையும் சூதும்
மெய்யாக இந்நாளில் மலிவாய்ப் பேச்சு
சீராக வாழும் வரம் கேட்டுவந்தோம்
நேரான பாதைதனைக் காட்டும் தாயே
கெட்டவர்கள் சகவாசம் விலக்கி வைப்பாய்
நட்பாக நல்லவரைச் சேர்த்தே வைப்பாய்
சரியான நேரமதில் தடுத்தாட் கொள்வாய் - அம்மா

18. திருக்கோயில் வினாயகபுரத் தலத்தைத் தேடி
ஆற்றருகே ஆலமர நிழலை நாடி
ஆடிவரும் நாகமாக வலமே வந்து
அடியாரின் அபிஷேகப் பாலை உண்பாய்
அழியாத கருங்கல்லில் சிலை வடித்தே
கருவறையில் உன்னைக் குடமுழுக்கு ஆட்டி
பரிவார மூர்த்திகளும் அமர்ந்தே காக்கும் - அம்மா
பவாணியே முத்துமாரித்தாயே போற்றி

## முத்துமாரி மகிமை (தெய்வராஜன் சித்தீசன்)

முத்துமாரித்தாயாரின் மகிமை பெருகுது – அவ
முக்கண்ணன் பாதி என்ற உண்மை புரியுது
ஆதிபராசக்தி அவள் அருமை தெரியுது – அவ
அற்புதங்கள் அதிசயமாய் இன்னும் தொடருது

தேடி வாருங்க தாயை நாடிவாருங்க
ஓடிவாருங்க அருளை அள்ளிச் செல்லுங்க

மாத்தளையின் முத்துமாரி ஆதிசக்திதான்
மங்கைமாரித்தாயாரும் பராசக்திதான்
கொத்துக்குளமாரி கூட மகேஸ்வரி தான் - எங்க
சகலகலை அம்மனுமே முத்துமாரிதான்

தேடி வாருங்க தாயை நாடிவாருங்க
ஓடிவாருங்க அருளை அள்ளிச் செல்லுங்க

புன்னைச் சோலைக் காளியம்மை முத்துமாரிதான்
கண்ணகித்தாய் அம்மாளும் முத்துமாரிதான்
நயினை நாக பூஷணியும் முத்துமாரிதான் - எங்க
நாககாளி அம்மனுமே முத்துமாரிதான்

தேடி வாருங்க தாயை நாடிவாருங்க
ஓடிவாருங்க அருளை அள்ளிச் செல்லுங்க

## விநாயகபுரத்தினிலே ( சித்தீசன் ஹேமசாயினி சுபராஜினி)

விநாயகபுரத்தினிலே வீற்றிருக்கும்
வினைதீர்க்கும் மீனாட்சி முத்துமாரி
விதிப்பயன் தீயதென்றால் மாற்றிவிடு – உன்
திருப்பாதம் சரணடைந்தோம் முத்துமாரி

சோதனை வேதனையெல்லாம் கடந்தவளே
சாதனையாய் எதிர்நீச்சல் போட்டவளே
எமைக் காக்க கடியதவம் புரிந்தவளே – எம்
சுமைதாங்கியாய் இங்கு அமர்ந்தவளே (விநாயக..)

வர்மராசன் வளர்த் தெடுக்க பெண்குழந்தையாய் வளர்ந்தாய்
ரேணுகா நாமத்துடன் இளவரசியாய் இருந்தாய்
பரசுராமன் உன் மகனால் சிரசறுந்தும் உயிர் பிழைத்தாய்
உடன்கட்டை ஏறுகையில் உடை எரிந்தும் நீ இருந்தாய்

வேப்பை இலை உடை உடுத்தி மானம் காத்து நீ சென்றாய்
சேவகரின் சேரியிலே பாணக்கமும் நீகுடித்தாய்
நெசவாளர் சேரியிலெ ஏற்ற ஆடை அணிந்து கொண்டாய்
அந்த ஈஸ்வரனை நீ கண்டவுடன் நடந்தவற்றை நீ பகர்ந்தாய்

காலின் பெருவிரலில் நின்று தவம்புரிந்தாய்
பதினாறு வருஷங்களாகத் தொடர்ந்து நின்றாய்
பரமனிடம் முத்துப் பெற்றாய் முத்துமாரி
பக்தர்களைக் காத்தருள்வாய் முத்துமாரி

பரமசிவன் மனம் மகிழ்ந்து என்னவரம் வேண்டுமென்றார்
பதினெட்டு முத்துவகை வரமாகக் கொடுங்கள் என்றார்
கடுகுதிரி நெல்லுதிரி பனையேறி பொக்களிப்பான்
இந்த நல்ல முத்துகளை ஈஸ்வரனும் உமக்களித்தார்

அவர்தந்த முத்தருமை நீ அறிய வேண்டுமென்று
ஆதிசிவன் மேனியிலே கனகமுத்தை நீ எறிந்தாய்
தணலான முத்துகளின் அனல் பொறுக்க மாட்டாமல்
நீ எறிந்த முத்துகளை இறக்கிவிடு என்றுரைத்தார்

இளையோர்க்கும் முதியோர்க்கும் எறிந்துவிடாதே
தீயோர்க்கும், கொடியோர்க்கும் எறிந்திடு தாயே
பரமனிடம் முத்துப் பெற்றாள் முத்துமாரி
பக்தர்களைக் காத்தருள்வாய் முத்துமாரி

உ

## மாரியே முத்துமாரியே (ஜெய்சன்யா சுபராஜினி)

மாரியே முத்துமாரியே எங்கள்
சிவசங்கரி பரமெஸ்வரி
ஜெகதீஸ்வரி ராஜேஸ்வரி
மாரியே முத்து மாரியே.

தூய அன்பே உருவானவளை
அன்பே மூச்சானவளை
நெஞ்சில் வைத்தே மகிழ்ந்திடுவோம் அன்னை
பாதங்களை வணங்கிடுவோம்

- மாரியே முத்துமாரியே .

காஞ்சி புரத்திலே காமாட்சி – நீ
காசிப்பதியின் விசாலாட்சி
மாமதுரையிலே மீனாட்சி – எங்கள்
மாமாங்க ஈஸ்வரன் பார்வதி நீ
தாய் தாய் தாய் என்றென்றும் நீ தானே தாய்
தாய் தாய் தாய் என்றென்றும் நீ தானே தாய்

- மாரியே முத்துமாரியே ..

மைலாப்பூரிலே கற்பகம் நீ – மேல்
மருவத்தூரிர் பரா சக்தியும் நீ
மண்ணடியில் மஹாகாளியும் நீ – திரு
வேற்காட்டிலே கரு மாரியும் நீ

தாய் தாய் தாய் என்றென்றும் நீ தானே தாய்
தாய் தாய் தாய் என்றென்றும் நீ தானே தாய்

- மாரியே முத்துமாரியே ..

## சங்கரன் பார்வதியே (தெய்வராஜன் உஜெனிதா)

சங்கரன் பார்வதியே சகலகலை ஈஸ்வரியே
மங்கைமாரித் தாயாரே வாருமம்மா

கங்கையின் கரை அமர்ந்த காசி விசாலாட்சியம்மா
எங்களை வாழவைக்கும் வழியைக் காட்டம்மா
ஈஸ்வரி......... திருவருள் தாரும் முத்துமாரியே (சங்கரன்..)

பொய் களவு ஏதும் இல்லா வாழ்வு வேண்டுமே
தாய் தந்தை சுற்றம் தன்னைப் பேண வேண்டுமே

நண்பராக நல்லவர் வேண்டும்
நலிந்தவர்க்கு உதவிட வேண்டும்

ஆலையடித்தாயே உந்தன் உறுதுணைவேண்டும்
பரமெஸ்வரி புவனேஸ்வரி ஸ்ரீ ராஜேஸ்வரி நீயே
முத்துமாரியே (சங்கரன்..)

அனைத்தையும் படைத்தவள் நீ ஆதிஷக்தியே
அனைவரையும் காக்க வேண்டும் அன்னை துர்க்கையே

ஆசை கோபம் தனிந்திட வேண்டும்
அயலோரை மதித்திட வேண்டும்

ஆலையடித் தெய்வம் உந்தன் உறுதுணை வேண்டும்
காமாட்சியே மீனாட்சியே சிவஷங்கரி நீயம்மா
முத்துமாரியே.. (சங்கரன் ...)

கருணை அன்பு உள்ளவராக நாங்க வாழனும்
தருமம் தானம் செய்வதற்கே கைகள் நீளணும்

வறுமை தீரும் உழைப்பும் வேண்டும்
பொறுமை காக்கும் உறுதியும் வேண்டும்

ஆலையடித்தாயே உந்தன் உறுதுணை வேண்டும்
ஜெகதீஸ்வரி ஸர்வேஸ்வரி ஸ்ரீ காயத்திரி நீயே
முத்துமாரியே (சங்கரன்...)

## ஆற்றங்கரை அருகினிலே (தெய்வராஜன் உஜெனிதா)

ஆற்றங்கரை அருகினிலே கொலுவிருக்கும் தேவி
ஆற்றல்களைத் தருபவளே தாயே கருமாரி

ஆலை மரநிழலமர்ந்து அருள் அள்ளிச் சொரிபவளே
ஆதிசிவன் நாயகியே அன்னை மூகாம்பிகையே

அன்னையே காமாட்சியே கற்பகமே முத்துமாரியே ... (ஆற்றங்கரை)

தாயாரே உன் பாதம் பணிந்து நின்றோம் ஈஸ்வரியே
தம்பிலுவில் பதிவாழும் கண்ணகித் தாய் நீதானே

பலவேஷம் கொண்டவளே பார்வதியே வாருமம்மா
உலகாளும் சங்கரியே ஊர் சிறக்க வாருமம்மா

அன்னையே காமாட்சியே கற்பகமே முத்துமாரியே... (ஆற்றங்கரை)

உன் கதவு திறந்து விட்டால் உற்சாகம் பிறக்குதம்மா
உன் பெயரைச் சொன்னாலே ஊழ் வினையும் பறக்குமம்மா

பஞ்சம் பசி மறையுமம்மா பட்ட துன்பம் குறையுமம்மா
கெஞ்சுகின்றோம் ரஞ்சனியே கேட்ட வரம் தாருமம்மா

அன்னையே காமாட்சியே கற்பகமே முத்துமாரியே... (ஆற்றங்கரை)

ஊரேல்லாம் உன் பவனி வீதிகளில் வருகுதம்மா
உன் அழகைப் பார்ப்பதற்குக் கண்கள் கோடி வேண்டுமம்மா

பார்க்கும் இடங்கள் எல்லாம் நிறைகுடம் தெரியுதம்மா
பறவைக் காலடிகள் முன்னோக்கிப் போகுதம்மா

அன்னையே காமாட்சியே கற்பகமே முத்துமாரியே... (ஆற்றங்கரை)

## புவனேஸ்வரி (தெய்வராஜன் உஜெனிதா)

புவனேஸ்வரி எங்கள் பரமெஸ்வரி
பவநாசினி சுகம் தரும் ஈஸ்வரி
காரணியே பூரணியே கருமாரியே
ஊரவரைக் காத்து நிற்கும் காத்யாயினி (புவனேஸ்வரி)

கலியுகத்தைக் காத்திடவே கடிய தவம் நீ புரிந்து
முத்துகளைப் பெற்றவளே முத்துமாரியே..
ஆறுகடல் சங்கமிக்கும் அழகு தென்னஞ்சோலையிலே
ஆலையடி தேடி வந்தாய் முத்துமாரியே..
வினாயகபுரத்தினிலே வீற்றிருக்கும் அன்னையவள்
வேண்டிய வரம் தருவாள் நாடி வாருங்க
வேதனைகள் தீர்த்திடுவாள் ஓடி வாருங்க (புவனேஸ்வரி)

ஆணவத்தை அடங்கவைப்பாள் அன்பு வழி காட்டிடுவாள்
அன்னை முத்துமாரி அவள் கருணை காட்டுவாள்
நல்லவற்றை நாட வைத்து நல்லவற்றைப் பேசவைத்து
நல்லவராய் வாழ வைப்பாள் முத்துமாரியே
கடுங்கோபம் தணியவைத்து கனிவாகப் பேசவைத்து
கல் மனதும் உருக வைப்பாள் காளி துர்க்கையே
இல் வாழ்வும் சிறக்க வைப்பாள் ஈஸ்வரித்தாயே

## அம்மா முத்துமாரி (சாமந்தி சரண்யா)

அம்மா முத்துமாரி அகிலம் காக்கும் தேவி
ஆதிபராபரி நீயே அம்பிகையே அருள்வாயெ

தீயவற்றைத் தீய வைக்கும் காளி அம்மனே
தூயவற்றைத் துலங்க வைக்கும் துர்க்கை அம்மனே

தாய் மனத்தாய் எமை அணைக்கும் கனகவல்லியே
சங்கரனின் பாதியம்மா அர்த்த நாரியே (அம்மா)

ஆனித்திங்களில் அருளை பொழியும் மாரியே
ஆவலுடன் திகழ்வார்கள் பக்தர் கோடியே

கொடு நோய் உன் பார்வை பட்டால் மறைந்து போகுமே
கோவிந்தன் தங்கை என்றால் விலகி ஓடுமே (அம்மா)

கற்பூரச் சட்டி ஏந்தி சுற்றி வருகிறோம்
கவலையாவும் தீரும் என்று நம்பி இருக்கிறோம்

எண்ணமெல்லாம் உன் நினைவாய் ஏங்கி நிற்கிறோம்
வண்ண மலர்ப் பாதம் கண்டு சுமையைக் குறைக்கிறோம் (அம்மா)

## கும்பாபிஷேகம் (சுபராஜினி ஜெய்சன்யா)

கும்பாபிஷேகம் நாம் காணவந்தோம்
அம்பாளின் அருட் கோலம் கண்டோம் - தாயே
அஹங்கார இருள் மாற்றுவாயே – மாரி
அருள் தந்து வினை மாற்றுவாயே (கும்பா..)

மாதங்கள் தோறும் மழை பெய்ய வேண்டும்
வளமோடு நாம் வாழ வேண்டும் - மாரி
வற்றாத உமதன்பு வேண்டும்
எப்போதும் உன்னை மறவாமல் வாழ
தப்பாமல் வழிகாட்ட வேண்டும் - எம்மில்
தன்மான உணர்வூட்ட வேண்டும் - அம்மா
தன்மான உணர்வூட்ட வேண்டும் - அம்மா

தடுமாறி நாங்கள் வழிமாறிச் சென்றால்
தடுத்தாண்டு எமைக்காக்க வேண்டும் - அம்மா
தளராத மனம் என்றும் வேண்டும்.
வஞ்சங்கள் தீர்க்கா வருங்காலம் வேண்டும்
நெஞ்சார எமை வாழ்ந்த வேண்டும் - அம்மா
கெஞ்சுகின்றொம் முத்துமாரி – உன்னை
கெஞ்சுகின்றொம் முத்துமாரி – உன்னை (கும்பாபிஷேக..)

## ஆலைமர நிழலைத் தேடி (சித்தீசன் ஹேமசாயினி)

ஆலைமர நிழலைத் தேடி முத்துமாரி தென்னஞ்
சோலை தனை நாடி வந்தாள் முத்துமாரி
ஆற்றங்கரை அருகமர்ந்தாள் முத்துமாரி எங்கும்
அருளை அள்ளி வீசுகின்றாள் முத்துமாரி

காவடிகள் ஆடி வந்தோம் முத்துமாரி – உந்தன்
சேவடியை நாடி வந்தோம் முத்துமாரி
கற்பூரம் ஏற்றுகின்றோம் முத்துமாரி – எங்கள்
கர்மாவை தொலைத்து விடு முத்துமாரி

காமாட்சி கருமாரி கற்பகத்தாயே – அம்மா
காயத்ரீ கதம்பரி கனகவல்லியே
விமலேஸ்வரி விக்னேஸ்வரி வீரகாளியெ – அம்மா
வினாயகபுரத்தில் வாழும் முத்துமாரியே

வடபத்ரகாளியாக வலம் வருவாயே – தாயே
கும்பாபிஷேகம் காண கருணை காட்டம்மா
வேதனையில் வாழுகின்றோம் வினை அழிப்பாயே- அம்மா
சோதனைகள் போதும் அம்மா சுகம் தருவாயே

சொந்த ஊரில் உறவுகள் நாம் சேர்ந்திருந்தே – அம்மா
சுற்றங்களைப் பிரிந்து இன்று ஏங்குகின்றோம்
காணாமல் போனவர்கள் கணக்கில் இல்லையே – அம்மா
கண்முன்னே தொலைந்ததற்கு வழக்கும் இல்லையே

நடந்ததை மறந்து மனம் தேறுகிறோமே - இந்த
தொடர்கதை முடியவேண்டும் முத்துமாரியே
ஆழியலை அடித்து மனம் பேதலித்தோமே – அம்மா
அத்தனையும் மறந்துவாழ அருள்தருவாயே

உ

**மாரி அம்மா முத்துமாரியம்மா** (தெய்வராஜன் ஹேமசாயினி)

மாரி அம்மா முத்து மாரியம்மா
மாரி அம்மா மங்கை மாரியம்மா

ஆற்றங்கரை உமக்கு சுகமோ சொல்லு
ஆலை நிழல் உனக்கு இதமோ சொல்லு - மாரி

எண்ணமெல்லாம் நீ வாழ வேண்டும் - என்றும்
ஏமாற்றம் இல்லாத பெருவாழ்வு வேண்டும்
கண் திறந்து எமைப் பார்க்க வேண்டும் - அதில்
கர்ம வினை எல்லாமே கரைந்தோட வேண்டும் - மாரி
மங்காத புகழ் கொண்ட மாரி – நீல
மணிகண்டன் துணையான ஸ்ரீ முத்துமாரி
மலை போன்ற துயரங்கள் எல்லாம் - சிறு
மணலாக்கி எமை மீட்ட ஸ்ரீ மங்கைமாரி - மாரி

விநாயக புரத்தினிலே வாழும் - சித்தி
விநாயகன் தாயாரே சிவமுத்து மாரி
பிணி இன்றி நாம் வாழ வேண்டும் - பிறவிப்
பிணி தீர நீதானே வழி காட்ட வேண்டும் - மாரி

உ

## மாரியின் பார்வை பட்டால் (சாவித்திரி - சரண்யா)

முத்துமாரி அம்மாளின் கோவிலுக்குப் போவோம்
முக்கண்ணன் பத்தினியின் தரிசனம் காண்போம்.

அன்னையின் நாமம் அனுதினமும் சொல்வோம்
ஆலயடி சென்றே அருள் ஜோதி பார்போம் - முத்துமாரி

அதிகாலை விளித்தெழுந்து ஆலயம் தேடி வந்தோம்
அடையாளப் பெட்டியுடன் பரிவாரம் சுற்றி வந்தோம்

ஓம்கால ஓசையுடன் உடுன்னையொலி கேட்குதம்மா
மாரியம்மன் தாலாட்டில் மனம் கசிந்து உருகுதம்மா
சீலையான உன்னை உயிரோடு பார்த்தோம்
சிவசக்தி கண்டே பேரின்பம் கொண்டோம் - முத்துமாரி

மாரியைக் கண்டு எங்கள் மனச் சுமை இறக்கி வைத்தோம்
கோரிக்கை ஏதுமில்லை தரிசனம் போதுமென்றோம்

ஆண்டுதோறும் வரவேண்டும் அருளை வேண்டிப் பெறவேண்டும்
மீண்டும் மீண்டும் உன்தயவால் நாங்கள் இங்கு வரவேண்டும்
உன்தோற்றம் காண எம் உள்ளம் ஊங்கும்
உன்பார்வை ஒன்றே வாழ்நாளில் போதும்.

ST.COMMUNICATION BATTI..... 065-2227083